**செய்தி வெளியீடு எண்: 694** **நாள்: 28.09.2018**

**<u>செய்தி வெளியீடு</u>**

இன்று (28.09.2018) காணொளி காட்சி மூலமாக சென்னையில் நடைபெற்ற 30–வது சரக்குகள் மற்றும் சேவைகள் வரி மன்றக் கூட்டத்தில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D.ஜெயக்குமார் அவர்கள் கலந்து கொண்டார்கள். இந்த கூட்டத்தில் முனைவர் T.V. சோமநாதன், IAS, கூடுதல் தலைமைச் செயலாளர் / வணிகவரி ஆணையர் அவர்களும் கலந்துகொண்டார்.

வரலாறு காணாத மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கேரள மக்களின் துயர் துடைப்பதற்கான உரிய நிதி ஆதாரத்தை பெருக்குவதற்கு கூடுதலாக கேரளாவில் நுகரப்படும் சரக்குகள் மற்றும் சேவைகள் மீது விதிக்கப்படும் மாநில வரிக்கு கூடுதலாக 10% செஸ் (Cess) விதிப்பதற்கான கேரள அரசின் கருத்துருவானது இந்த கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது.

இது போன்ற இயற்கை பேரிடரால் மாநிலங்கள் பாதிக்கப்படும் போது, வருவாய் ஆதாரத்தினை மாநிலமே ஏற்படுத்தி கொள்ளும் இத்தகைய முன்மொழிவுக்கு தமிழகம் ஆதரவு அளிக்கிறது என்பதை இன்றைய கூட்டத்தில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் தெவித்தார்கள். ஆனால், அவ்வாறு விதிக்கப்படும் செஸ் (Cess) ஆனது உள்ளூர் வர்த்தகத்தின் மீது தான் விதிக்கப்பட வேண்டும் என்றும் இடைமாநில வர்த்தகத்தின் மீது செஸ் (Cess) விதிக்கப்பட்டால் அது பிற மாநிலங்களை பாதிக்கக்கூடும் என்பதால் அவ்வாறான வர்த்தகத்தின் மீது விதிக்கப்படக்கூடாது என்றும் இக்கூட்டத்தில் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் வலியுறுத்தினார்.

புதியதாக உருவாக்கப்பட்டு விருகின்ற நமூனாவினை விரைவாக இறுதி செய்து, வரி செலுத்துவோர் அதனை பயன்படுத்த பழகுவதற்கு போதுமான கால அவகாசம் அளிக்கப்பட வேண்டும் என்றும், IGST தலைப்பின் கீழ் 2017–18 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ள ஈடு செய்யாத தொகையினை மாநிலங்களுக்கு பிரித்தளிக்க வேண்டும் என்றும், ஏற்கனவே குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களின் பிரச்சனைகள் குறித்து 04.08.2018 அன்று நடைபெற்ற 29–வது மன்றக் கூட்டத்தில் முடிவெடுத்ததின் பேரில், விரைவாக அத்துறை சார்ந்த பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேண்டும் என்றும் மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் வலியுறுத்தினார்கள்.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் துறையினால் உற்பத்தி செய்யப்படும் கீழ்க்காணும் பொருட்கள் மீதான வரியினை குறைப்பதற்கு மற்றும் விலக்களிப்பதற்கு மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D.ஜெயக்குமார் அவர்கள் தொடர்ந்து மன்றக் கூட்டங்களில் வலியுறுத்தி வருகிறார்கள்:-

கைத்தறி மற்றும் விசைத்தறி பொருட்கள்; கொள்கலனில் அடைக்கப்பட்டு வணிகச் சின்னம் இடப்பட்ட அரிசி மற்றும் இதர உணவு தானியங்கள்; ஜவ்வரிசி; தீப்பெட்டி; ஆட்டா சக்கிக்கு இணையாக கிரைண்டர் மீதான வரியினை நிர்ணயித்தல்; ஊறுகாய்; வெண்ணெய்; நெய்; விவசாயக் கருவிகள்; ஜவுளித் தொழிலில் பயன்படும் இயந்திர பாகங்கள்; பம்பு செட்டுகள்; மீன்பிடி தொழிலுக்கான உபகரணங்கள்; மரவள்ளிக் கிழங்கு ஸ்டார்ச்; வணிக சின்னமிடப்படாத நொறுக்கு தீனிகள், பேக்கரி பொருட்கள் மற்றும் குளிர்பானங்கள்; பல்வேறு வகையான வத்தல்கள்; மாற்றுத்திறனாளிகள் பயன்படுத்தக்கூடிய கருவிகள்; பிஸ்கட்டுகள்; உரம், நுண் ஊட்டச் சத்துகள், இயற்கை உரங்கள், பூச்சி கொல்லிகள் மற்றும் பூஞ்சை கொல்லிகள்; கற்பூரம்; காய்ந்த மிளகாய், வெந்தயம், தனியா, மஞ்சள் போன்றவை மற்றும் அதன்

பொடிகள்; சீயக்காய்; கடித உறை, அட்டைகள், டயரிகள் பயிற்சி குறிப்பு மற்றும் கணக்கு புத்தகம் போன்ற காகிதப் பொருட்கள்; பாலியஸ்டர்/நாரினால் ஆன நெய்யப்படாத பைகள்; காதிப் பொருட்கள்; கழிவு செய்யப்பட்ட டயர்கள்; வெளுப்பதற்கான திரவம்; பவானி தரைவிரிப்பு; கட்டுமானப் பொருட்கள்; மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக்; வேப்பம் பிண்ணாக்கு; அரிசி தவிடு மீது வரி விலக்கு அல்லது எதிரிடை கட்டணமாக மாற்றல்; வெள்ளி மெட்டி, தாலி போன்றவை; அலுமினிய பாத்திரங்கள் மற்றும் அலுமினிய கழிவுகள்; பட்டு நூல் மற்றும் சரிகை; தேங்காய் நார் பொருட்கள்; செங்கல் மீது இணக்க முறையில் வரி செலுத்துதல்; இரப்பர் கலந்த நாரினால் செய்யப்பட்ட மெத்தைகள்; பேக்கரியில் பயன்படும் ஈஸ்ட்; மெல்லும் புகையிலை மற்றும் சுருட்டு; கொள்கலனில் அடைக்கப்பட்ட உணவுப் பொருட்கள்; கொசு அழிப்பான்கள்; மொறுமொறுப்பான ரொட்டித்துண்டு (ரஸ்க்); நன்னாரி சர்பத்; பனஞ்சர்க்கரை; வறுத்த கடலை; காலர் துணி; கோவா மற்றும் பால்பேடா; சாம்பிராணி; பனைநார் மற்றும் மட்டைகள்; கோரைப் பாய், பனை, தென்னை, பாக்கு, பேரிச்சம், வாழை போன்ற இலைகளிலிருந்து தயாரிக்கப்படும் தட்டு, குவளை, தொன்னை, பானை போன்ற பொருட்கள், கைவினைப் பூட்டு; பயோ டீசல்; சல்லா துணி மற்றும் கட்டு போடும் துணி; மெழுகுவர்த்திகள்; சங்கு மற்றும் கடல் சிப்பியாலான கைவினைப் பொருட்கள்; ரயில் வாகனம் மற்றும் பாகங்கள் வினியோகம் மீதான உள்ளீட்டு வரி வரவினை அனுமதித்தல்; கையால் செய்யப்பட்ட இரும்பு பெட்டி; வாகன உதிரி பாகங்கள்; பனிக்கூழ் போல் குளிர் பானங்களையும் இணக்கமுறை வரிவிதிப்பில் எதிர்மறை பட்டியலில் சேர்த்தல்.

ஆகவே தமிழகம் வைத்துள்ள நிலுவையாக உள்ள கோரிக்கைகள் குறித்து விரைவில் முடிவெடுக்குமாறும் மாண்புமிகு பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை அமைச்சர் திரு D. ஜெயக்குமார் அவர்கள் மத்திய நிதியமைச்சர் திரு அருண் ஜெட்லி அவர்களை கேட்டுக் கொண்டார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**